**இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை - 2023**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த:து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் ஆகியவற்றிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அதிகாரசபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க வெளிப்படுத்தும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்..

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை

எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காள்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கம் ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அதிகார சபையின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையையும் மதிப்பீடு செய்தல்.
- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான

வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவிலும் மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது அதிகாரசபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க அதிகாரசபை செயற்பட்டுள்ளதாக,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

### 1.5 நிதிக்கூற்றுக்ளைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுதுறை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| | உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 02 இல் 29 ஆம் பிரிவின் பிரகாரம் நேரடி முறைமையில் காசுப் பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்கும் போது மிகையுடன் தேறிய காசுப் பாய்ச்சல் ஒப்பீடு செய்து வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் அதிகாரசபையினால் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | இணங்கிக் கொள்ளப்படுகின்றது. நாங்கள் சமர்ப்பிக்க வேண்டிய படிவம் சரி செய்யப்படுதல் வேண்டும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்க 02 இன் 31 ஆம் பிரிவின் பிரகாரம் முதலீடுகள் மற்றும் நிதிச் | இணங்கிக்கொள்ளப்படு கின்றது. 2024 ஆம் ஆண்டிற்கான கணக்குகளின் மூலம் | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயற்பாடுகள் தோற்றுவிக்கின்ற காசுாப் பாய்ச்சல்கள் அச் செயற்பாடுகளின் கீழ் தனித்தனியாகக் காட்டப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில இனவிருத்தி நிலையத்தினை நிர்மாணிக்கும் நடவடிக்கைகளுக்காக செலவு செய்யப்பட்ட ரூபா 155,121,285 தொகை முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காட்டுவதற்குப் பதிலாக செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | தனித்தனியாக காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (இ) | வெலிகந்த இனவிருத்தி நிலையத்தை நிர்மாணிக்கும் ஒப்பந்தம் தொடர்பாக 14,363,746 செயலாற்றல் பிணை முறியை காசாக்கியதன் காரணமாக ஒப்பந்தக்காரர் தொடுத்த இணக்கசபை வழக்குத் தீர்ப்பின் பிரகாரம் மீண்டும் ஒப்பந்த நிறுவனத்திற்கு தாமத வட்டிக் கட்டணம் ரூபா 12,209,896 தொகையினை உள்ளடக்கி ரூபா 34,049,373 தொகை செலுத்த வேண்டும் என 2023 ஆம் ஆண்டின் போது தெரியப்படுத்தப்பட்டிருந்ததுடன் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 08 இன் 22 ஆம் பிரிவின் பிரகாரம் அதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் போது இது சம்பந்தமாக கணக்குகளின் மூலம் ஏற்பாடு ெய்யப்பட்டிருக்கவில்லை. 2024 ஆம் ஆண்டில் அதிகாரசபையின் மீண்டுவரும் மற்றும் மூலதன மதிப்பீடுகள் திருத்தம் செய்யப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டில் அதிகாரசபைக்கு மீன்களை வைத்திருக்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 85,827,680 தொகையான அமைச்சு மானியம் மற்றும் ரூபா 14,264,998 தொகையான வெளிநாட்டு மானியமாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட முழு மானியத்தின் மொத்தம் ரூபா 100,092,678 தொகை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 11 இன் 95 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் | கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்ட இந்த நியமம் சம்பந்தமாக இன்னும் ஆய்வு செய்யப்படுவதுடன் எதிர்காலத்தில் அது சம்பந்தமான விடயங்களைச் சமர்ப்பித்தல் அல்லது சரிசெய்தலினை மேற்கொள்ள வேண்டுமாயின் அதனை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பிரகாரம் வருமானத்திற்கு எடுத்துக்கொள்ளப்படாது செயற்திட்ட கணக்குகளுக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. அந்த நிகழ்ச்சித்திட்டத்திற்காக மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 108,205,259 தொகையான முழுச்செலவும் வருமான கூற்றிற்கு எடுத்துக்கொள்ளப்படாது செயற்திட்ட கணக்குகளுக்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. | | |
| (உ) | ஒரு ஏக்கர் அளவிலான மன்னார் ஓலைத்தொடுவாய் கடலட்டை வளர்ப்பு நிலையத்தின் காணி ரூபா 800,000 பெறுமதிக்கு 2016 ஆம் ஆண்டிலிருந்து 30 ஆண்டுகளுக்கு குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 12 இன் 27 ஆம் பந்தியிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் குத்தகைப் பெறுமதியானது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட வேண்டிய போதிலும் மேற்கூறிய குத்தகை ஆதனமானது ஒரு குத்தகை ஆதனமாகக் கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை. | இணங்கிக்கொள்ளப்படுகின்றது. 2024 ஆம் ஆண்டில் கணக்குகளில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணககீட்டு நியமத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.5.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கண்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | உலக உணவு மற்றும் விவசாய அமைப்பினால் (FAO) ரூபா 143 மில்லியன் செலவு செய்து மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்நோக்கு விசேட உவர் நீர் மீன் வளர்ப்பு நிலையம் நிர்மாணிக்கப்பட்டு 2017 யூன் 29 ஆந் திகதி அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. 2022 செப்தெம்பர் 08 ஆந் திகதி அச்சொத்துக்கள் ரூபா | மட்டக்களப்பு பல்நோக்கு விசேட உவர் நீர் மீன் வளர்ப்பு நிலையத்தினை மதிப்பீடு செய்து கணக்குகளில் காட்டப்படாமையானது அக்காணி இதுவரை அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்படாமையி | அதிகாரசபையினால் பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்களைப் பொறுப்பேற்று கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 155,450,000 தொகைக்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தும் அது இதுவரை அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்பட்டு அப்பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்காமையின் காரணமாக அப்பெறுமதியால் நடமுறையற்ற சொத்துக்களும் அரசாங்க மானியமும் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | னாலாகும். | |
| (ஆ) | புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள ரூபா 75,880,829 தொகையான இறால் வளர்ப்பு நிலையம், நீர்வாழ் உயிரினங்கள் அபிவிருத்தி மற்றும் தர மேம்பாட்டு செயற்திட்டத்தினால் 2009 திசெம்பர் 30 ஆந் திகதி ஒப்படைக்கப்பட்டிருந்தும் அத்திகதியிலிருந்து சொத்துக்களாக அடையாளங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. 2015 யூன் 22 ஆந் திகதி மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் இந்த வளர்ப்பு நிலைய காணியும் கட்டிடமும் ரூபா 47,951,600 தொகைக்கும் ஏனைய சொத்துக்கள் ரூபா 3,146,550 தொகைக்கும் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த விடயங்கள் எதுவும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. பொருள் மீளாய்வு அறிக்கையின் மூலமும் இப்பொருட்களின் உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இச்சொத்துக்கள் 2016 ஆம் ஆண்டிலிருந்து அரசாங்க தனியார் கூட்டு உடன்படிக்கையின் கீழ் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் இச்சொத்துக்கள் 2016 ஆம் ஆண்டிலிருந்து 2023 திசெம்பர் 31 வரையும் நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட்டிருக்காததனால் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சொத்துக்கள் | புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள இறால் வளர்ப்பு நிலையத்தை நிர்மாணிக்கும் கிரயம் அல்லது மதிப்பீட்டுக் பெறுமதியை கணக்குகளின் மூலம் அடையாளங்காண முடியாதிருந்ததானது அக்காணி இது வரை அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்படாததினாலாகும். | அதிகாரசபையினால் பயன்படுத்துகின்ற சொத்துககளைப் பொறுப்பேற்று கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (இ) | 2017 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரை அமைச்சு மானியங்களின் மூலம் நிர்மாணிக்கப்பட்ட ஹம்பாந்தோட்டை ரெகவ நண்டு வளரப்பு நிலையத்திற்கான ரூபா 221,719,566 செலவு நடைமுறையற்ற சொத்துக்கள் மற்றும் பிற்போட்ட வருமானங்களின் கீழ் கண்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் 2022 ஆம் ஆண்டின் போது அப்பெறுமதி பிற்போட்ட வருமானக் கணக்குகளிலிருந்து நீக்கிகுத்தகை நிச்சமற்ற வருமானக் கணக்காக நடைமுறையற பொறுப்புக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்தும் கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதனை தீர்த்துவைப்பதற்கு இன்னும் ஆய்வு செய்யப்பட்டு வருவதுடன் பொருத்தமான நடைமுறையை அடையாளங்கண்டு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | முதலீட்டு ஆதனத்தை சரியாக அடையாளங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஈ) | அதிகாரசபைக்குச் சொந்தமான முருதுவெவ நிலையத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட வலை (Netting) இருப்பு மீதிக்கும் கணக்கு கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள மீதிக்குமிடையே ரூபா 1,334,964 வித்தியாசம் காணப்பட்டதுடன் அது தொடர்பாக ஆராய்ந்து பாரர்த்து தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முருத்தவெவ நிலையத்தின் Netting Material பெறுமதியானது தவறுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் 2024 ஆம் ஆண்டின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இருப்பு மீதியை அடையாளங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (உ) | ரெகவ நீர் வளர்ப்பு செயற்திட்டம் 30 ஆண்டுகள் காலப்பகுதிக்காக ஒரு தனியார் கம்பனிக்கு 2021 திசெம்பர் 02 ஆந் திகதியிலிருந்து குத்தகைக்கு வழங்கியிருந்ததுடன் 02 ஆண்டுகள் சலுகைக்காலத்தின் பின்னர் 2023 திசெம்பர 02 ஆந் திகதியிலிருந்து அக்கம்பனியிடமிருந்து அறவிட வேண்டிய மீளாய்வாண்டு தொடர்பான குத்தகை வருமானம் ரூபா 7,440,760 தொகை கிடைக்கவேண்டிய குத்தகை வருமானமாக அடையாளங்காணப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் போது வழங்கிய அறிக்கையில் ரெகவ வருடாந்தம் அரசாங்க தனியார் தொழில் முயற்சியின் கீழ் அறவிட வேண்டிய பெறுமதி உள்ளடக்கப்படவில்லை. அதற்கிணங்க அப்பெறுமதி கணக்கீடு செய்ப்படவில்லை. | பெறவேண்டிய வருமானத்தினை சரியாக அடையாளங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | மீய்வாண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்தலாக ரூபா 2,468,360 காட்டப்பட்டிருந்தும் உள்ளபடியான கொள்வனவு செயதல்களின் பெறுமதி ரூபா 15,299,714 ஆக இருந்ததனால் முதலீட்டுச் செயற்பாடுகள் ரூபா 12,831,354 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | தவறுதலாக ரூபா 4,978,453.50 பெறுமதி கொடுப்பனவின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது . 2024 ஆம் ஆண்டின் போது இது சம்பந்தமாக கவனம் செலுத்தப்படும். | காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டின் பெறுமதி சரியாககணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (எ) | மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தப் பெறுமதி ரூபா 63,150,000 ஆன 10.5 ஏக்கர் அளவிலான 02 காணிகளும் 3.976 ஹெக்டயர்களான 03 காணிகளும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டில் குசல பங்கதெனிய நிலையத்திற்காக அருகாமையிலுள்ள ஒரு காணி கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அப்பெறுமதி பட்டோலையில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. 2024 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்ட அனைத்து மதிப்பீட்டு பெறுமதியையும் கணக்குகளில் செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அதிகாரச் சபைக்குச் சொந்தமான காணிகள் சரியாக கணக்கீடு செய்யப்பதல் வேண்டும் |
| (ஏ) | மீளாய்வாண்டில் ரூபா 4,336,210 பெறுமதிக்கு கொ்வனவு செய்யப்பட்ட 04 பைபர் தாங்கிகள் சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இணங்கிக்கொள்ளப்படு கின்றது. 2024 ஆம் ஆண்டிற்கான கணக்குகளின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அதிகாரசபையின் சொத்துக்களை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஐ) | 2019,2017 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளிலிருந்து காணப்பட்டு வரும் மொத்தமாக ரூபா 5,958,802 தொகையான செயற்திட்டங்கள் மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதிகளை வருடமானமாக எடுத்துக்கொள்வதற்கு அல்லது தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் குறித்த நபர்களையும் அந்த | இந்த மீதிகளில் அமைச்சினூடாக திவிநெகும மீன்களை வைப்புச் செய்வதற்காக வழங்கி மிகுதியான நிதி ஏற்பாடுகளை மீண்டும் அமைச்சிற்கும் மற்றும் மாகாண சபைகளின் மூலம் வழங்கி அடையாளம் காணமுடியாத மிகுதி | நிதி நிலைமை கூற்றில் காட்டப்பட்டுள்ள மீதிகளை உறுதிப்படுத்துவதற்குரிய சான்றுகள் சமர்ப்பித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீதிகளையும் உறுதிப்படுத்துவதற்கு தேவையான எழுத்து மூல சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதி ஏற்பாடுகளை அமைச்சிற்கும் அனுப்பிவைத்து அரசாங்கத்தின் வருமானத்திற்கு எடுத்துக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | |
| (ஒ) | திவினெகும உடன்படிக்கையின் பெயரில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 71,928,492 செலவு மீதி காட்டப்பட்டிருந்ததுடன் அந்த மீதியின் சரியான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வது தொடர்பாக மீதிகளின் பட்டியல், மற்றும் அம்மீதிகளின் காலப்பகுப்பாய்வு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | திவினெகும நலன்பெறுனர்கள் சம்பந்தமான பதிவேடும் திட்டமும் மேற்பார்வை பிரிவில் பேணப்பட்டு வருவதுடன் நீதிமன்றத்தின் மூலம் அனுப்பிவைக்கப்பட்ட காசோலைகளின் பெறுமதியில் திவினெகும நிலுவையான தவணைப் பணத்தின் அளவினை அடையாளங்காண முடியாததன் அடிப்படையில் இப்பதிவேட்டினை நாளதுவரையாக்குவதில் சிக்கலான நிலைமை உருவாகியுள்ளது. அதற்கிணங்க சரியாக அறவீடு செய்வதற்கு உள்ள நிலுவைப் பணம் சம்பந்தமான பதிவேட்டினை சமர்ப்பிப்பதில் சிக்கல் காணப்படுகின்றது. | நிதி நிலைமை கூற்றில் காட்டப்பட்டுள்ள மீதிகளை உறுதிப்படுத்துவதற்குரிய சான்றுகளை சமர்ப்பித்தல் வேண்டும். |
| (ஓ) | அமைச்சின் காலாண்டு ரீதியான விற்பனை வருமானத்தின் அடிப்படையில் அடையாளங்காண வேண்டிய ரூபா 6,697,682 தொகையான சமூக பாதகாப்பிற்கான பங்களிப்பு வரிப் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்காததுடன் அதன் காரணமாக ஆண்டிற்கான இலலாபம் அத்தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | அதிகாரசபையினை மேற்கூறிய சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரியிலிருந்து விடுவித்து தருமாறு வேண்டி ஒரு கடிதம் பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்திற்கான பிரதியுடன் நிதி அமைச்சின் செயலாளருக்கு | பொறுப்புக்களை சரியாக அடையாளங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க வழங்கப்படுகின்ற ஆலோசனையின் அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | |
| (ஔ) | வெளிநாட்டு மானியமாக தொழில்நுட்ப உதவி நிகழ்ச்சித்திட்டத்திடமிருந்து 2023 செப்தெம்பர் 08 ஆந் திகதி கிடைத்த ரூபா 1,151,975 தொகை காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்காததனால் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழான வெளிநாட்டு மானியம் அத்தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. மேலும் வழங்குனர்களுக்கு கொடுப்பனவு செய்த ரூபா 1,184,975 தொகை காசுப் பாய்ச்சல் கூற்றில் பதியப்பட்டிருக்காததனால் காசு செலவு செய்தலும் அத்தொயையால் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது. | இணங்கிக்கொள்ளப்படு கின்றது. தலைப்பு மாற்றமாக பதிவுசெய்யப்பட்டுள்ளது . | அதிகாரசபைக்கு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்காக கிடைத்த வெளிநாட்டு மானியத்தினை சரியாக காசுப்பாய்ச்சல் கூற்றில் பதிவுசெய்தல் வேண்டும். |
| (க) | குசலபங்கதெனிய சிறுநீர் அலங்கார மீன் வளரப்பு நிலையத்தை குத்தகைக்கு வழங்குவது தொடர்பாக ரூபா 653,150 குத்தகைப் பணத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததுடன் அத்தொகை கிடைக்க வேண்டிய வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கையின் 19 ஆம் பிரிவின் பிரகாரம் செயற்திட்டத்தின் உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக 02 மாத சலுகைக்காலம் வழங்கப்பட்டிருநதது. அதனால் குத்தகைப் பணத்தை அறவீடு செய்தலானது 2023 ஆம் ஆண்டின் யூன் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டது என தயவாக தெரிவிக்கிறேன். | கிடைக்க வேண்டிய வருமானத்தை அடையாளங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (கா) | ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் கிரப் சிடி செயற்திட்டத்தினை குத்தகைக்கு வழங்குவதற்காக உடன்படிக்கை செய்யும் போது அதிகாரசபையினால் இனவிருத்தி | ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் கிரப் சிடி செயற்திட்டத்தினை குத்தகைக்கு வழங்குவதற்காக | நிலையாக சொத்துக்கள் உரிய சொத்துக்கக்கு மூலதனமாக்கப்படுதல் வேண்டும். |

| | |
|---|---|
| நிலைய காணியில் உள்ள 2019 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்த ரூபா 7.9 மில்லியன் பெறுமதியான நிலையான சொத்துக்கள் உரிய சொத்துக்களுக்கு மூலனமாக்கப்படாது செயற்திட்ட நிர்மாண கிரயத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | உடன்படிக்கை செய்யும் போது உடன்படிக்கை செய்வதற்கு உள்ளடக்கிய திகதியான 2021 திசெம்பர் 02 ஆந் திகதி பட்டோலைப் பொருட்கள அடையாளங்காணப்பட்டிருக்காததனால் உடன்படிக்கையில் உள்ளடக்கப்படாதிருந்தும் 2022/02/03 ஆந் திகதியளவில் பட்டோலைப் பொருட்கள் அடையாளங்காணப்பட்டு பட்டோலைப்படுத்தப்பட்டு தெப்ரோபேன் ப்ரோசன் சீபுட் (தனியார்) கம்பனிக்கு ஒப்படைத்தல் மேற்கொள்ளப்பட்டது. நிதிப்பிரிவினால் செலுத்தப்படுகின்ற வுவுச்சர்களின் அடிப்படையிலேயே நிதிக்கூற்றுக்களுக்கு நிர்மாணச் சொத்துக்களின் பெறுமதி அடையாங்காணப்படுகின்றது. அதற்கிணங்க அதில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் தனித்தனியாக அடையாளங்காணக்கூடியதாக இருந்த போதிலும் பெறுமதியை தீர்மானிக்க முடியாதுள்ளது. அதற்கிணங்க எதிர்காலத்தில் நிர்மாணக் கிரயத்தை கணக்கீடு செய்யப்படுவதானது உரிய பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் |

பெறுமதியின் அடிப்படையில் மாத்திரமாகும்.

1.5.3 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கை

| **விடயம்** | **நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி** | **துணை அறிக்கைகளின் பிரகாரம் பெறுமதி** | **வித்தியாசம்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|---|---|
| மீதிகளின் உறுதிப்படுத்தல் கடிதங்களைச் சமர்ப்பித்த 05 நிறுவனங்களினால் ரூபா 3,850,435 பெறுமதியான கடன்பட்டோர் மீதிகளுடன் இணங்கியிருக்காததனால் கடன்பட்டோர் மீதிகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியாதுள்ளது. | 3,850,435 | - | 3,850,435 | இந்த மீதிகளின் உறுதிப்படுத்தல் கடிதங்களுடன் இணங்கியிருக்காத மீதிகள் சம்பந்தமாக ஆய்வு செய்து செயற்திட்ட பிரிவுடன் இணைந்து தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டுள்ள மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு உரிய சான்றுகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

**1.5.4 கணக்காக்காய்விற்காக எழுத்துமூல சான்றுகள் இல்லாமை**

| **விடயம்** | **தொகை** | **வழங்கப்பட்ட கணக்காய்வு சான்று** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|---|
| | **ரூபா** | | | |
| மீளாய்வாண்டில் இருப்பு மீளாய்வு செய்யப்படாத நிலையங்களுக்கு பொறுப்பாக இருக்கின்ற நிலையப் பொறுப்பு உத்தியோகத்தர்களின் அறிக்கைகளின் பிரகாரம் இருப்புக்களின் பெறுமதி ரூபா 87,172,848 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததனால் இப்பெறுமதியின் சரியான தன்மையும் உள்ளமையும் உறுதிப்படுத்தப்படவில்லை. | 87,172,848 | இருப்பு மீளாய்வு அறிக்கை | உண்மையாகவே இந்த இருப்புக்களின் உள்ளமையினை உறுதிப்படுத்துவதற்காக ஒரு குழு இருப்பு மீளாய்வு நடவடிக்கைகள் தொடர்பாக ஆய்வு செய்து வருகின்றது. | இருப்பு மீளாய்வினை மேற்கொண்டு அந்த அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு இருப்பு பெறுமதி கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு** | | **இணக்கமின்மைகள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|---|
| (அ) | 2022 செப்தெம்பர் 20 ஆந் திகதிய 2022 இன் 25 ஆம் இலக்க சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி அதிகாரச்சட்டத்தின் II ஆம் பகுதியின் 4(1)(ஆ) பிரிவு | சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரியினை விதிப்பதற்காக தகமை பெறுகின்ற ஒரு நிறுவனம் ஏதாவது ஒரு காலாண்டிற்காக அவ்வாறு புரள்வு ரூபா 30 மில்லியனை மிகைக்குமாயின் சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி அதிகாரச்சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட வேண்டியதுடன் வரி அதிகாரச்சட்டத்தின் v ஆம் பகுதியின் 16 ஆம் ஏற்பாட்டின் பிரகாரம் அட்டுறு அடிப்படையில் வரியினை கணக்குவைத்தல் மற்றும் அதிகாரச்சட்டத்தின் 17(1) ஆம் ஏற்பாட்டின் பிரகாரம் வரி செலுத்துதல் இடம்பெறவேண்டிய போதிலும் அதிகாசபையின் 2023 ஆம் ஆண்டிற்கான மீன் விற்பனை வருமானம் தொடர்பாக அதிகாரச்சட்டர்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அதிகாரசபையினை மேற்கூறிய சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரியிலிருந்து விடுவிக்குமாறு வேண்டி ஒரு கடிதம் பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்திற்கான பிரதியுடன் நிதி அமைச்சின் செயலாளருக்குகு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க வழங்கப்படுகின்ற அறிவுறுத்தல்களின் அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| **(ஆ)** | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை** | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 396(ஈ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை வங்கியின் 0003270048 ஆம் இலக்க வங்கி கணக்கின் மொத்தமாக ரூபா 2,625,470 தொகையான கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை மிகைத்த 57 காசோலைகள் சம்பந்தமாக நிதிப்பிமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இப்பிரச்சினையானது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவிற்குச் சமர்ப்பித்து தீர்த்துவைத்ததன் பின்னர் வழங்கப்படுகின்ற ஆலோசனையின் அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 570 மற்றும் 571 | 02 ஆண்டுகளை மிகைத்த ரூபா 32,191,028 தொகையான வைப்புக்களை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு அரசாங்க வருமானத்திற்குச் செலவுவைக்கப்படாது நிறுத்திவைத்தல் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது. | 2015 ஆம் ஆண்டு வரை வேண்டிக்கொள்ளப்படாத ஒப்பதங்கள் மீதான நிறுத்திவைத்தல்களை தற்பொழுது கணக்கருகளிலிருந்து நீக்குவதற்காக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேலும் 2016 ஆம் ஆண்டின் பின்னரான ஆண்டுகள் தொடர்பாக நி.பி இற்கு இணங்க இரண்டு ஆண்டுகளை மிகைத்த ஒப்பந்தங்கள் மீதான நிறுத்திவைத்தல்களையும் 2024 ஆம் ஆண்டின் போது நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்க நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2022 யூலை 08 ஆந் திகதிய | அரசாங்க கூட்டுத்தாபனங்களினால் பயன்பாட்டிற்கு | ILO செயற்திட்டத்தினை அமுல்படுத்துவதற்காக | அதிகாரசபைக்கு வெளிநாட்டு மானியங்களைப் |

| | | | | |
|---|---|---|---|---|
| | 30/94(4.4) ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கை | எடுத்துக்கொள்ளப்படுகின்ற வெளிநாட்டு உதவி சம்பந்தமான செலவு மதிப்பீட்டிற்கு நிதி ஏற்பாட்டினை வழங்குகின்ற வரிசை அமைச்சினூடாக நிறுவனத்திற்கு வெளிநாட்டு மானியங்கள் கிடைக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் அதிகாரசபைக்கு கிடைத்துள்ள ரூபா 14.26 மில்லியன் தொகையான வெளிநாட்டு மானியங்கள் சம்பந்தமாக அந்த ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய பெறுகைத் திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் இணக்கப்பாடு பெற்றுக்கொளளப்பட்டிருக்கவில்லை. | பெற்றுக்கொள்ளும் போது சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்கி நடத்தல் வேண்டும். |
| (ஈ) | வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் 2011 ஏப்ரல் 21 ஆந் திகதிய MOEF/ERD/2011/01 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் 2014 யூன் 26 ஆந் திகதிய MOEF/ERD/2014/01 ஆம் இலக்க சுற்றறிக்கை | வெளிநாட்டு மானியங்களை வழங்குதல் மற்றும் உடன்படிக்கைகளை மேற்கொள்ளுதல் சம்பந்தமாக வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்கு தெரியப்படுத்துதல் மற்றும் திறைசேரியின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளுதல் இடம்பெற வேண்டிய போதிலும் அதிகாரசபைக்கு கிடைத்துள்ள ரூபா 14.26 மில்லியன் தொகையான வெளிநாட்டு மானியம் சம்பந்தமாக அந்த வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ILO செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்காக வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் இணக்கப்பாடு வழங்கப்பட்டுள்ளது. அவுஸ்ரேலிய அரசாங்கத்தின் மூலம் கல்வி அமைச்சிற்கு கிடைத்த ACIRA செயற்திட்டம் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் மூலம் அங்கீகரித்த ஒரு செயற்திட்டமாகும். இச்செயற்திட்டம் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் மூலம் அங்கீகரித்த ஒரு செயற்திட்டம் என்பதனால் இதற்காக எங்கள் அதிகாரசபைக்கு கிடைக்க வேண்டிய | அதிகாரசபைக்கு வெளிநாட்டு மானியங்களைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் உடன்படிக்கைகள் மேற்கொள்ளும் போது சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நிதி ஏற்பாடுகள் நேரடியாக அவுஸ்திரேலியா அரசாங்கத்தின் மூலம் எங்கள் அதிகாரசபைக்கு வழங்கப்பட்டுள்ளது. இச்செயற்திட்டம் 2025 ஆம் ஆண்டின் தொடக்க காலாண்டின் போது முடிவடைவதற்குற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது | |
| (உ) | 2019 மார்ச் 26 ஆந் திகதிய 02/2019 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கை | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் அரசாங்க தனியார் கூட்டு தொழில் முயற்சிகளின் முதலீட்டு செயற்திட்டத்திற்காக முதலீட்டாளர்களை தெரிவு செய்யும் போது அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கலந்துரையாடல் குழுவின் மூலம் அரசாங்க தனியார் முதலீட்டு பெறுகை நடைமுறைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அரசாங்க தனியார் கூட்டு தொழில் முயற்சி செயற்திட்டமாக குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள குசல பங்கதெனிய இனவிருத்தி நிலையத்திற்காக அந்த நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்திற்காக விருப்பினை கோரும் போது அமைச்சு பெறுகைக் குழுவின் மூலம் பெறுகைத் தீர்மானம் எடுக்கப்படுவதுடன் அதற்குத் தேவையான தொழில்நுட்ப சிபாரிசுகளை எடுப்பதற்காகவும் ஒரு தொழில் நுட்ப குழு நியமிக்கப்பட்டுள்ளது. | அரசாங்க தனியார் கூட்டு தொழில் முயற்சி முதலீட்டு நடைமுறைகளின் போது அரசாங்க நிதி சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | 01/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 13.2 ஆம் பிரிவு | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் ஒரு அரசாங்க நிறுவனத்தினால் உடைந்து போய் பயன்படுத்த முடியாத வாகனங்களை | அதிகாரசபையின் உடைந்து போய் பயன்படுத்த முடியாத வாகனங்களை அடையாளங்காண்பதற்காக விசேட மீளாய்வுச் சபை | உடைந்து போய் பயன்படுத்த முடியாத வாகனங்கள் சம்பந்தமாக அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் |

| | | |
|---|---|---|
| அடையாளங்காண்பதற்காக விசேட மீளாய்வுச் சபை நியமிக்கப்பட்டு மீளாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும் அதிகாரசபையின் வாகனங்கள் சம்பந்தமாக ஒரு மீளாய்வுச் சபை நியமிக்கப்பட்டு மீளாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நியமிக்கப்பட்டுள்ளதுடன் உடைந்த வாகனங்களை அடையாளங்காணல் மேற்கொள்ளப்படும். | பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 119,724,959 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 103,989,075 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 223,714,034 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு ரூபா 53,982,047 வருமானத்தில் குறைவு, ரூபா 97,895,250 விற்பனைக் கிரயத்தில் அதிகரிப்பு, ரூபா 14,114,804 நிருவாக செலவில் அதிகரிப்பு ரூபா 26,171,080 பகிர்ந்தளித்தல் செலவில் அதிகரிப்பு, மற்றும் ரூபா 251,152 நிதிச் செலவில் அதிகரிப்பு என்பன பிரதான காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் முறுதவெல பயிர்ச் செய்கை அபிவிருத்தி நிலையத்தின் புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக முற்பணங்கள் மற்றும் கொடுப்பனவு விலைப்பட்டியல்களாக செலுத்திய ரூபா 4,412,475 தொகையை அறவீடு செய்வதற்கு முடியாதிருந்ததுடன் செலுத்திய பணமும் விளைவற்ற செலவாக மாறியிருந்தது. இதற்கு மேலதிகமாக முறுதவெல 01 ஒப்பந்தத்தின் மூலம் செலுத்திய ரூபா 8,262,017 தொகைக்குரிய நிர்மாண வேலைகளும் இன்றுவரை பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. | 2021/R/MURL/02 ஆம் இலக்கம் தொடர்பான புனரமைப்பு நடவடிக்கைகளானது மேற்கூறிய ஒப்பந்தம் கலைக்கப்பட்டதன் பின்னர் தற்பொழுது முடியலடைந்துள்ளதுடன் உரிய செயலாற்றல் பிணையாகிய ரூபா 610,473 தொகை அதிகார சபையினால் பெற்றுக்கொள்ளப்பட்டது. 2021/R/MURL/02 ஆம் இலக்கம் தொடர்பான ஒப்பந்தம் கலைக்கப்பட்டதன் பின்னர் பூரணப்படுத்தப்படாத குளத்தினை | செயற்திட்ட நடவடிக்கைகள் திட்டமிட்டவாறு துரிதமாக பூர்த்திசெய்யப்பட வேண்டியதுடன் முற்பணமாகச் செலுத்திய பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பூரணப்படுத்தி உற்பத்தி நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்படுகின்றது என தயவாக தெரிவிக்கிறேன். அவ்வாறே இந்த ஒப்பந்தக்காரரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 9,546,600 முற்பணத் தொகையும் ரூபா 7,150,950 இற்கு அண்மித்த செயலாற்றல் பிணைக்குரிய பணமும் அதிகாரசபையினால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன் இது வணிக நீதிமன்றத்தின் தீர்ப்பின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |
| (ஆ) | நடைமுயற்ற சொத்துக்களின் கீழேயுள்ள ரூபா 54,040,042 மீதி பல ஆண்டுகளாக காணப்பட்டிருந்தும் அதனை அடையாளங்கண்டு தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா 54,040,042 பெறுமதியான இந்த மீதி 10 ஆண்டுகளாக காணப்படுவதுடன் இந்த மீதி ஏற்பட்டுள்ள முறைமை மற்றும் அது சம்பந்தமாக போதியளவு தகவல்கள் இல்லாததனால் அந்த மீதி தீர்த்துவைக்கப்படாது இன்னும் காணப்படுகின்றது. | தீர்த்துவைக்கப்படாது காணப்படுகின்ற மீதியை அடையாளங்கண்டு தீர்த்துவைத்தல் வேண்டும். |
| (இ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 88 கடன்பட்டோர்களிடமிருந்து ரூபா 45,682,378 கிடைக்க வேண்டிய மீதியாக இருந்ததுடன் அதில் 01 ஆண்டிற்கும் 03 ஆண்டுகளுக்குமிடைப்பட்ட ரூபா 39,552,087 தொகையும் 03 ஆண்டுகளுக்கும் 05 ஆண்டுகளுக்குமிடைப்பட்ட ரூபா 1,495,451 தொகையும் 05 ஆண்டுகளை மிகைத்த ரூபா 4,034,840 மீதியும் காணப்பட்டதுடன் அந்த மீதிகளை அறவீடு செய்வதற்கு முறையான நடவடிக்கை | 2010 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரை நீர் உயிர் வாழ் அதிகாரசபையின் மூலம் ரூபா 238.46 மில்லியன் பெறுமதியான மீன் சினை கடன் வழங்கப்பட்டு அக்கடனை அறவீடு செய்வதற்காக ஒரு கடன் குழு நியமிக்கப்பட்டு முறைப்படியாக நடவடிக்கை எடுத்து ரூபா 4.39 | கடன்பட்டோர்களிடமிருந்து அறவிட வேண்டிய பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மில்லியனைத் தவிர்த்து மிகுதிப் பணம் அறவிடப்பட்டு மற்றும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அத்தொகையானது ஒட்டுமொத்தமாக கடன் வழங்கிய தொகையான ரூபா 238.46 மில்லியன் தொகையில் 1.84% சதவீதமாகும். | |
| (ஈ) | திவினெகும செயற்திட்டத்தின் கீழ் வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 3,322,500 கடன் மீதியினை அறவீடு செய்வதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இச்செயற்திட்டத்திற்கு நேரடியாக பங்களிப்புச் செய்யாத நலன்பெறுனர்களுக்கு மாவட்ட மட்டத்தில் அவர்களுக்கு அழைப்பாணைகளை அனுப்பியும் சில நலன்பெறுனர்களுக்கு வழக்கு தாக்கல் செய்தும் மீண்டும் பணத்தை அறவீடு செய்யும் நடைமுறை அமுல்ப்படுத்தப்பட்டது. | திவினெகுமநலன்பெறுனர்களிடமிருந்து அறவிட வேண்டிய பணத்தை அறவீடு செய்தல் வேண்டும். |
| (உ) | இரத்துச் செய்யப்பட்ட இரண்டு ஒப்பந்ததங்கள் சம்பந்தமாக அதிகாரசபையினால் அறவிட வேண்டிய ரூபா 11,213,291 பணத்தை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | St.Theresa Industries (Pvt) Ltd. நிறுவனத்திடமிருந்து அறவிட வேண்டியுள்ள ரூபா 1,540,507 பணம் சம்பந்தமாக சட்டமா அதிபரிடம் ஆலோசனை கேட்டு ஒரு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள் ளது. வழங்கப்படுகின்ற ஆலோசனைகளின் அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. Kirulla Eng. Service (Pvt) Ltd நிறுவனத்திடமிருந்து அறவிட வேண்டியுள்ள ரூபா 9,672,784 பெறுமதி திருத்தம் செய்யப்பட்டுள்ளதுடன் | அதிகாரசபையினால் அறவிட வேண்டிய பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அந்த திருத்திய பெறுமதி அறவிடப்பட்டுள்ளது. | |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) ஒரு ஆலோசனை சேவை நிறுவனத்திற்கு 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது செலுத்தப்பட்ட ரூபா 4,683,789 தொகைக்குரிய ஆலோசனை சேவை பூரணப்படுத்தப்பட்டிருந்தும் மீண்டும் ஒரு தடவை 2022 ஆம் ஆண்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நிர் உயிரின பூங்காவினை நிர்மாணிப்பதற்காக திட்டமிடல் மற்றும் நிர்மாண ஆலோசனை சேவை நடவடிக்கைகள் அந்த நிறுவனத்திற்கே ரூபா 4,219,408 தொகைக்கு வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு இந்த ஒப்பந்தம் தொடர்பாக ரூபா 1,538,750 தொகை மூலதனமாக்கப்பட்டிருந்தும் உரிய வேலை பூரணப்படுத்தப்பட்டிருக்காததனால் எதிர்பார்த்த குறிக்கோள்கள் நிறைவேற்றப்பட்டிருக்காததுடன் அக்கொடுப்பனவும் விளைவற்ற செலவாக இருந்தது. | உரிய முதலீட்டாளர்கள் மற்றும் ஆலொசனைக் கம்பனியை தொடர்புகொண்டு மிகுதி வேலைகளை மேற்கொள்வதற்கு அதிகாரசபை எதிர்பாரக்கின்றது. | உரிய நிர்மாண வேலைகள் துரிதமாக முடியவுறுத்தப்படுதல் வேண்டும். |

**3.2 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கண்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) திலாபிய மீனுக்குத் தேவையான உணவினை உற்பத்தி செய்வதற்கு 2019 ஒக்தோபர் 08 ஆந் திகதி ரூபா 11,802,000 பெறுமதியான உடவளவ மீன் உணவு செயன்முறைப்படுத்தும் நிலையத்தில் ஸ்தாபிக்கப்பட்ட மீன் உணவு தயாரிப்பு இயந்திரத்தின் மூலம் | நீர் உயிரின அதிகாரசபையின் நிகழ்கால தலைவரினால் இந்த இயந்திரம் அரசாங்க மற்றும் தனியார் கூட்டு தொழில் முயற்சியாக செயற்படுவதனை நிறுத்தி உற்பத்தி | தலாபியா மீனுக்குத் தேவையான உணவினை தயாரிக்கும் இயந்திரத்தினை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டுமம். |

| | | | |
|---|---|---|---|
| | வருடாந்தம் திலாபியா மீன் உணவு 127,000 கிலோ கிராம் உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தும் 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டில் முறையே 36,612 கிலோ கிராம் 38,361 கிலோ கிராம் மற்றும் 4.23 கிலோகிராம் உற்பத்தி செய்யப்பட்டிருந்தது. 2024 ஆம் ஆண்டின் ஒக்தோபர் 20 ஆந் திகதியளவில் உற்பத்தி இடம்பெற்றிருக்காததுடன் தற்பொழுது இந்த இயந்திரம் குறைந்த பயன்பாட்டிகு உட்பட்டிருந்தது. | நடவடிக்கைகளை எதிர்காலத்தில் செயற்படுத்துவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அந்த ஆலோசனைகளுக்கு இணங் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. | |
| (ஆ) | அதிகாரசபையினால் நீர் உயிரின வளர்ப்பினை மேம்படுத்தும் நடவடிக்கைக்காக 14 ஏக்கர் மற்றும் 138.275 ஹெக்டயர் அளவிலான 06 காணிகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தும் அக்காணிகள் நீர் உயிரின வளர்ப்பினை மேம்படுத்தும் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்படுகின்றது என அவதானிக்கப்பட்து. | வட மாகாணத்தில் நிரந்தரமாக கடற்றொழிலினை அபிவிருத்தி செய்வதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி ஏற்பாட்டின் கீழ் அமுல்ப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட கடல் சிப்பிகளை இனவிருத்தி நிலையம், கடற்பாசி வளர்ப்பு நிலையம், நண்டுகள் இனவிருத்தி செய்யும் நிலையம், மற்றும் நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி பயிற்சி நிலைய செயற்திட்டம் என்பவற்றுக்கு நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யாததன் அடிப்படையில் ஆரம்பிக்க முடியாதுள்ளது. மன்னார் மாவட்டத்தின் சவுத்பாரில் அமைந்துள்ள காணி மாத்திரம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய காணிகளை பொருத்தமாக அடையாளம் காண்பதற்கு வேண்டுதல் செய்யப்பட்டிருந்தும் | அதிகாரசபையின் பயன்பாட்டிற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட காணியை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | எங்களுக்கு ஒப்படைக்கப்படவில்லை. | |
| (இ) | 2022 ஆம் ஆண்டில் 06 நிலையங்கள் அமைந்துள்ள 45350 சதுர மீற்றர் அளவான மீன்தாங்கிகள் விளைவற்றுக் காணப்பட்டதுடன் 2023 ஆம் ஆண்டளவில் 04 நிலையங்கள் அமைந்துள்ள 35808 சதுர மீற்றர் அளவிலான தாங்கி விளைவற்றுக் காணப்பட்டது. உடவளவ காப் நிலையத்தின் 64900 சதுரமீற்றர் அளவிலான தாங்கியின் 21300 சதுர மீற்றர் கொள்ளளவானவை 2021 ஆம் ஆண்டிலிருந்து விளைவற்றுக் காணப்பட்ட போதிலும் செயற்படும் நிலைக்கு கொண்டுவருவதற்கு முடியாதிருந்தது. உடவளவ நிலையத்தில் 2022 ஆம் ஆண்டில் 2150 சதுரமீற்றர் அளவானவை விளைவற்றுக் காணப்பட்டதுடன் 2023 ஆம் ஆண்டளவில் அந்த அளவு 11800 சதுர மீற்றர் வரை அதிகரித்திருந்தது. | நன்னீர் உயிரின வளரப்பு நிலையமாகிய தம்புள்ள நிலையத்தில் 7000 சதுர மீற்றர் அளவான குளத்தின் தளப்பகுதிக்கு கொங்கிரீட் இடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. 4800 சதுரமீற்றர் அளவான குளப்பகுதி FAO செயற்திட்டத்தின் மூலம் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது. இங்கினியாகல குளத்தின் 4500 சதுரமீற்றர் அளவான பகுதி தற்காலிகமாக உற்பத்தி செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளது. மேலும் இரணமடுவின் விளைவற்ற 2708 சதுரமீற்றர் அளவிலான குளத்தின் பகுதி திருத்தம் செய்யவேண்டியுள்ளது. உடவளவ விளைவற்ற குளப்பகுதியை திருத்தம் செய்வதற்காக பணம் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. | மீன்தாங்கிகளின் கொள்ளளவினை உற்பத்தி மட்டத்திற்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |